**தமிழ்நாடு நில அளவைப் பதிவேடுகள் துறை**

**மண்டலத் துணை இயக்குநர் அலுவலகம், கோவை மண்டலம்**

**திருவள்ளுவர் ஆண்டு 2057 ஆனி திங்கள் 02 – ஆம் நாள்**

**ந.க.அ2 /3414/ 2025 நாள்: 16.06.2026**

**அறிவிக்கை எண்.01/2026**

கோவை, நிலஅளவைப் பதிவேடுகள் துறை, மண்டலத் துணை இயக்குநர் அலுவலகத்தில் காலியாக உள்ள பதிவுரு எழுத்தர் பணியிடத்தினை நேரடி நியமனம் மூலம் பூர்த்தி செய்யும் / நிரப்பும் பொருட்டு தகுதியான நபர்களிடமிருந்து 17.06.2026 முதல் 09.07.2026 மாலை 5.45 மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 1. | ஊதியம் | நிலை 02 (ரூ.15900 – ரூ.58500) |
| 2. | வயது (01.07.2026 அன்று அதிகபட்ச வயது வரம்பு) | 1. <u>General –</u><br>குறைந்த பட்சம் 18 முதல் அதிகபட்சம் 30 வயதுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>2. <u>BC/BCM/MBC/DC –</u><br>குறைந்த பட்சம் 18 முதல் அதிகபட்சம் 32 வயதுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும்.<br>3. <u>SC/ST –</u><br>குறைந்த பட்சம் 18 முதல் அதிகபட்சம் 35 வயதுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். |
| 3. | மொத்தக் காலிப்பணியிடம் | 01 (ஒன்று) |
| 4. | இனசுழற்சி விவரங்கள் | பொதுப்பிரிவு / GTGL (Priority)<br>முன்னுரிமை – கொரோனா தொற்றினாலோ, இதர காரணங்களாலோ பெற்றோர் இருவரையும் இழந்த இளைஞர்கள் (மகள் / மகன்)<br>Heirs (Sons / Daughters) Who have lost both father and mother due to Covid – 19 or other reasons |
| 5. | கல்வித் தகுதி | 10 –ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். |
| 6. | இதர தகுதிகள் | 1. தமிழ் மற்றும் ஆங்கிலம் எழுத படிக்க தெரிந்தவராக இருக்க வேண்டும்.<br>2. கணினி பற்றிய அடிப்படை அறிவு (Basic Computer Knowledge) |
| 7. | விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் | **09.07.2026** |
| 8. | விண்ணப்பம் சமர்ப்பிக்க வேண்டிய அலுவலக | மண்டலத் துணை இயக்குநர்<br>நிலஅளவைப் பதிவேடுகள் துறை |

| | முகவரி | அறை எண்.8, பழைய கட்டிடம், தரை தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் கோவை – 18. |
|---|---|---|

9. தேர்வு முறை –

அ. வாசித்தல் மற்றும் எழுதும் திறனின் மதிப்பெண் அடிப்படையில் தேர்வாகும் விண்ணப்பதாரர்கள் 1:5 என்ற விகிதத்தின் அடிப்படையில் நேர்முக தேர்விற்கு அழைக்கப்படுவார்கள்.

ஆ. திறனறித் தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வு குறித்த விவரங்கள் இவ்வலுவலகத்தில் பராமரிக்கப்படும் தகவல் அறிவிப்பு பலகையில் அறிந்து கொள்ளலாம்.

10. நிபந்தனைகள் –

1. விண்ணப்பதாரர்கள் கல்வித்தகுதி, இருப்பிடம், சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம் கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
2. விண்ணப்பதாரருக்கு 01.07.2026 அன்று 18 வயது பூர்த்தி அடைந்திருக்க வேண்டும்.
3. இனசுழற்சி, வயது மற்றும் கல்வி ஆகிய இனங்களில் போதிய தகுதி இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
4. விண்ணப்பதாரர் கோவை மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.
5. அரசு விதிகளின்படி இன சுழற்சி முறை பின்பற்றி நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

11. பொது –

1. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன்கோவை, நிலஅளவைப் பதிவேடுகள் துறை, மண்டலத் துணை இயக்குநர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது பதிவஞ்சல் மூலமாகவோ **09.07.2026** (வியாழக்கிழமை) அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் கிடைக்கும் வகையில் அனுப்பி வைக்கப்பட வேண்டும். காலம் கடந்து பெறப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து நேர்காணல் கடிதம் (Call Letter) அனுப்பி வைக்கப்படும்.
3. பதிவுரு எழுத்தர்களுக்கான விண்ணப்பப் படிவம் கோவை, மண்டல நிலஅளவைப் பதிவேடுகள் துறை, மண்டலத் துணை இயக்குநர் அலுவலகத்திலும் http://coimbatore.nic.in –இல் வெளியிடப்பட்டுள்ளது.

**மாவட்ட ஆட்சியர்**
**கோவை – 18.**